முருகப்பெருமான் துணை

**மகான் தொண்டரடிபொடி ஆழ்வார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.01.2022**, செவ்வாய்கிழமை

1. தவசியே ஞானத்தலைவனின்
   தவபலமாக வரம் பெற்று வந்த
   அவதார ஞானியே அரங்கனே
   அகிலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே துல்லிய ஆசி தனை
   குறைவிலா பிலவ கலை திங்கள்
   கருதியே விய திகதி குசன்வாரம்
   **(**பிலவ வருடம் தை மாதம் **12**ம் நாள், **25.01.2022** செவ்வாய்கிழமை**)**
   கண்டுரைப்பேன் தொண்டரடிபொடி ஆழ்வார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
   உண்மைபட சன்மார்க்க வழி
   ஞானமாக மக்கள் ஏற்று
   ஞானதேசிகனார் ஆசி பெற்றுவர
4. வருகவே மனத் தெளிவும்
   வருங்காலம் தனை அறியும்
   குருவருள் தயவும் அடைந்து
   குறைவிலா ஞானவான்களாவர்
5. அவனியில் மாற்றம் நடத்த
   ஆறுமுகப் பெருமான் வழிபாட்டை
   அவதாரம் எடுத்து அரங்கனும்
   அகிலமெங்கிலும் துவக்கி வர
6. வருகின்ற இந்த முயற்சிகள்
   வையகமெங்கும் சக்தியாகப் பரவி
   முருகப் பெருமான் அருளாசி
   முழுமைபட எங்கும் நிரம்பியே
7. நிரம்பியே கலியுக மக்களெல்லாம்
   நிலமதினில் ஞானவான்களாவர்
   வரம்பல பெற்று கலியுகத்தை
   வளமாக்கும் நல்நிலை மாற்றும்
8. மாற்றும் சக்தி மிக்கவர்களாகி
   மண்ணுலகை காத்து அருளும்
   ஆற்றல் கொண்டவர்களாகச் சிறந்து
   அனைத்து வகையும் தேற்றமும்
9. தேற்றமும் சர்வபலமும் காண்பர்
   தெய்வபலம் தனை கலியினில்
   ஆற்றலாக தருமம் வளர்த்து
   அறம் வேலி கொண்டு மக்களை

10. மக்களை தருமவான்களாக்கி
மாதருமம் வளர்க்கும் அரங்கன்
ஆக்கமான சேவைகள் தானே
அகிலமாற்றம் செய்து அருளும்

11. அருளும் பொருளும் வளமும்
ஆபத்தில்லா பாதுகாப்பும் கூடி
ஆறுமுக அரங்கன் அருளால்
அகிலம் அமைதி மகிழ்வும் காணும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–